**இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபை - 2023**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தினதும், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அதிகாரசபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை

எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணகக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கல்லூரிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபை ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 21 ஆம் பந்தியின் பிரகாரம் செலவினமொன்றாக இனங்காணப்பட வேண்டிய மோட்டார் வாகன பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு செலவினம் ரூபா 1,501,393 மோட்டார் வாகனக் கணக்கில் மூலதனமாக்கியதன் காரணமாக மீளாய்வாண்டின் மிகை மற்றும் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மோட்டார் வாகனக் கணக்கின் மீதி என்பன அப்பெறுமானத்தால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டு முதல் இந்த நிலைமை மீண்டெழும் செலவினத்தின் கீழ் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் செலவினங்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 14 ஆம் பந்தியின் பிரகாரம் அதிகார சபையினால் பயிற்சி நிலையங்களாகப் பயன்படுத்தப்படுகின்ற காணிகள் மற்றும் அந்தக் காணிகளில் நிர்மாணிக்கப்பட்ட 28 கட்டிடங்களின் பெறுமதி என்பன இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தின் போது காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிறுவனத்திற்குரிய சகல சொத்துக்களும் மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (இ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 47 ஆம் பந்தியின் பிரகாரம் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்களின் நியாயமான பெறுமதி அதன் இழிவுப் பெறுமதியில் பொருன்மையானதாக மாறுபடுமிடத்து ஒவ்வொரு மூன்று வருடங்களுக்கு அல்லது ஐந்து வருடங்களுக்கு ஒரு தடவை மீள்மதிப்பீடு செய்ய வேண்டியிருந்த போதிலும் அதிகார சபையினால் மீள்மதிப்பீடு படிவத்தில் கணக்கு வைக்கப்பட்டுள்ள ரூபா | தற்போது மீண்டும் மீள் மதிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் அது முடிவடைந்தவுடன் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் சொத்துக்களின் நியாயமான பெறுமதியை வெளிப்படுத்தும் வகையில் மீள் மதிப்பீடு செய்து கணக்குகளில் காண்பித்தல் வேண்டும். |

6,098,701,187 பெறுமதியுடைய காணி, கட்டிடங்கள் மற்றும் மோட்டார் வாகனங்கள் என்பன 05 வருடங்கள் முதல் 15 வருடங்கள் வரையான காலப் பகுதியில் மீள்மதிப்பீடு செய்யப்படாமையின் காரணமாக அந்த 03 சொத்து வகுப்புக்களினதும் நியாயமான பெறுமதி வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது கிடைக்கப்பெற்ற பாடநெறி வருமானம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது 05 பயிற்சி நிலையங்களில் 2023 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட 43 பாடநெறிகளில் எதிர்வரும் ஆண்டிற்காக கிடைக்கப்பெற்ற ரூபா 6,952,728 வருமானம் பிற்போட்ட வருமானமாக கணக்கீடு செய்யப்படாமல் மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன் காரணமாக ஆண்டின் மிகை மற்றும் பிற்போட்ட வருமானம் அப்பெறுமானத்தால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் பாடநெறி கட்டணங்கள் உரிய காலப்பகுதியின் பிரகாரம் கணக்கீடு செய்வதற்கு மாவட்ட மற்றும் தேசிய பயிற்சி நிலையங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | ஆண்டுக்குரிய வருமானம் மற்றும் செலவினங்கள் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | அதிகார சபையினால் ஊழியர் பணிக்கொடைக்காக ஒதுக்கீட்டைக் கணிப்பிடும் போது ஒவ்வொரு ஊழியரும் சேவைக்கு சேர்க்கப்பட்ட திகதி அடிப்படையாக கொள்ளாமையின் காரணமாக 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பணிக்கொடை ஒதுக்கீட்டு கணக்கின் மீதி ரூபா 26,046,767 குறைத்தும், | ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்ட பின்னர் அந்த ஊழியரை நிரந்தரமாக்கும் போது நியமன திகதியாக சேவை நிரந்தரமாக்கப்பட்ட திகதி எடுக்கப்பட்டமையினால் இந்த பிரச்சினைகள் ஏற்பட்டிருந்ததுடன் இதனை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பணிக்கொடை ஒதுக்கீடுகள் கணிப்பிடும் போது சரியான தரவுகளை அடிப்படையாகக் கொண்டு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திரண்ட நிதியம் அப்பெறுமானத்தால் அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (இ) | 2022 மே 25 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்த ரூபா 48 மில்லியன் நிலையான வைப்புக்குரிய வட்டி வருமானம் அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்படாமையின் காரணமாக மீளாய்வாண்டின் வட்டி வருமானம் ரூபா 124,695 இனாலும், திரண்ட மிகை ரூபா 4,923,568 இனாலும் மற்றும் கிடைக்க வேண்டிய வட்டி வருமானம் ரூபா 5,048,263 இனாலும் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | நிலையான வட்டி வருமானம் அட்டுறு அடிப்படையில் கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஆண்டிற்குரிய பணமாகக் கிடைத்த வருமானம் மற்றும் பெறவேண்டிய வருமானங்கள் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஈ) | அதிகார சபைக்குரிய பயிற்சி நிலையங்களில் 2023 ஆம் ஆண்டின் போது பொருட்கள் களவாடப்பட்டமைக்குரியதாக மேற்கொள்ளப்பட்ட ரூபா 7,127,888 நட்டம் பாதுகாப்பு சேவை வழங்குகின்ற நிறுவனத்திலிருந்து செலுத்துவதற்கு இணங்கியிருந்தமையினால் பெறவேண்டியதாக காண்பிப்பதற்கு பதிலாக பாதுகாப்பு சேவை செலவினத்தில் குறைத்து காண்பிக்கப்பட்டதன் காரணமாக ஆண்டின் மிகை மற்றும் நடைமுறைச் சொத்துக்கள் அப்பெறுமானத்தால் முறையே அதிகரித்தும் மற்றும் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் இவ்வாறான நட்டத்தை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஆண்டிற்குரிய செலவினம் மற்றும் நட்டத்தை சரியாக நிதிக்கூற்றுக்களில் காண்பித்தல் வேண்டும். |
| (உ) | Skill for Inclusive Growth (SFIG) செயற்திட்டத்தின் மூலம் அஹங்கம மற்றும் கதுருவல பயிற்சி நிலையங்களுக்காக | 2024 ஆம் ஆண்டில் கணக்குகளில் உள்ளடக்குவத்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலையான சொத்துக்களை சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டின் போது கிடைக்கப்பெற்ற ரூபா 65,170,697 பயிற்சி உபகரணங்கள் மற்றும் ரூபா 4,540,165 பெறுமதியான பயிற்சி பொருட்களும், 2022 ஆம் ஆண்டின் போது கிடைக்கப் பெற்ற ரூபா 1,777,500 பெறுமதியான ஊடக உபகரணங்களும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஊ) | 2023 ஆம் ஆண்டின் போது ஆலோசனையாளர்களுக்கு படி செலுத்துவதற்காக ரூபா 107,323,495 மாத்திரம் அமைச்சிலிருந்து கிடைத்திருக்கும் போது நிதிக் கூற்றுக்களில் ரூபா 117,168,560 ஆக காண்பிக்கப்பட்டதன் காரணமாக ஆண்டின் வருமானம் மற்றும் செலவினம் ரூபா 9,845,065 அதிகரித்து நிதிச் செயலாற்றல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | தவறொன்றினால் 2022 ஆம் ஆண்டின் திசம்பர் மாதத்தின் 31 இல் உள்ளவாறு கிடைத்த ரூபா 9,845,065 தொகை 2023 ஆம் ஆண்டின் பெறுவனவாக குறிப்பிடப் பட்டமையால் இந்த வேறுபாடு ஏற்பட்டிருந்தது. | ஆண்டுக்குரிய வருமானம் மற்றும் செலவினங்கள் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (எ) | 2023 - 2027 கூட்டுடிணைந்த திட்டம் தயாரிப்பதற்காக ஆலோசனை நிறுவனத்திற்கு செலுத்துவதற்காக திறன் அபிவிருத்தி மற்றும் தொழில் கல்வி அமைச்சிலிருந்து கிடைக்கப் பெற்ற ரூபா 1,000,000 தொகை பெறுவனவு மற்றும் கொடுப்பனவு ஒரு கணக்கின் மூலம் மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக உரிய செலவினம் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை. | இதனை கணக்கீடு செய்யும் போது தவறொன்றினால் பெறுவனவு மற்றும் கொடுப்பனவுகள் சேர்த்து கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் தனித்தனியாக இனங்காணக்கூடிய வகையில் கணக்கீடு செய்தல் வேண்டும். |

1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

1.6.1 பெறவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் அதிகார சபைக்கு கிடைக்க வேண்டிய பாடநெறி கட்டண கணக்கின் மீதி ரூபா 39,205,296 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 7,628,756 தொகை 01 வருடம் முதல் 04 வருடங்கள் வரையிலான காலத்தில் இருந்து கொண்டுவரப்படுகின்ற மீதியாக இருந்ததுடன் அந்த மீதியை அறவிடுவதற்கு அதிகார சபைக்கு முடியாதிருந்தது. | 13 வருடங்கள் தொடர்ச்சியாக கல்விசார் நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் பாடநெறிகளை பின்பற்றிய பயிலுனர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய பணத்தை பெற்றுக்கொள்வதற்கு கல்வி அமைச்சு இணங்கியிருந்ததுடன் ஏனைய பாடநெறிக் கட்டணங்களில் அநேகமானவை தற்போது அறவிடப் பட்டுள்ளது. | பெறவேண்டிய பணத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 677,908,091 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 361,681,911 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 316,226,180 மேலும் வீழ்ச்சி ஒன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு ஏனைய செயற்பாட்டு செலவினங்கள் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) அமைச்சு மற்றும் ஏனைய நிறுவனங்களின் மூலம் பல்வேறு பணிகளுக்காக 2019 முதல் 2022 வரை அதிகார சபைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 38,998,981 தொகை உரிய பணிகளுக்காக பயன்படுத்தப்படாமல் இவ்வறிக்கைத் திகதி வரையிலும் வங்கி நடைமுறைக் கணக்கில் | மோட்டார் தொழில்நுட்ப பயிற்சி உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் ரூபா 27 மில்லியன் சேமிப்பதற்கு பிரதான காரணம் கொவிட் 19 தொற்றுநோய் மற்றும் பொருட்கள் இறக்குமதி | குறித்துரைத்த பணிகளுக்காக கிடைத்த பணத்தை அந்த ஆண்டில் உரிய பணிகளுக்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | விளைவற்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | வரையறுக்கப்பட்டமை ஆகும். | |
| (ஆ) | இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை முழுமையான (100 சதவீதம்) பங்கு உரித்துடன் 2013 திசெம்பர் 18 ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரமின்றி அதிகார சபையின் நிதியத்திலிருந்து VTA Holdings Ltd என்ற பெயரில் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்த கம்பனியை கலைப்பதற்கு தேவையான ஆவணங்கள் 2022 யூன் 20 ஆந் திகதி கம்பனிப் பதிவாளர் திணைக்களத்திற்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. கம்பனியின் வங்கிக் கணக்குகள் மற்றும் செயல் நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கை தயாரிக்குமாறு அமைச்சின் செயலாளரால் ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும் அந்த அறிக்கை 2023 யூலை 20 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | பணிப்பாளர் சபையின் ஆலோசனையின் படி VTA Holdings கணக்கு நடவடிக்கைகளை மேற்கொண்ட S&A Consultants PVT Ltd இற்கு கலைப்பதற்காக அறிவிக்குமாறும் அந்த நிறுவனத்திலிருந்து பதிலொன்று கிடைக்காதிருக்குமாயின் முறையான பெறுகை முறைமையின் ஊடாக கலைக்கும் நடவடிககைகளை மேற்கொள்வதற்கு பணிப்பாளர் சபை அங்கீகாரம் வழங்கியிருந்தது. | செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கை யொன்று சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அம்பாந்தோட்டை மிரிச்சவில தேசிய தொழிற்பயிற்சி நிலையத்தின் நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட்ட போதும் வேலை கட்டிடத்திற்காக ரூபா 19,053,095 செலவிடப்பட்டதன் பின்னர் | NBRO நிறுவனத்துடன் மிரிச்சவில தொழிற்பயிற்சி வேலைத்தள கட்டிடம் பரீட்சித்து தர அறிக்கை | செலவிடப்படுகின்ற பணத்தை ஆக்கபூர்வமானதாக பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஒப்பந்தகாரரின் நலிவான செயலாற்றலின் காரணமாக 2015 சனவரி 05 ஆம் திகதி முதல் நிர்மாணங்கள் கைவிடப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்தகாரருக்கு எதிராக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படாதிருந்ததுடன் இடைநடுவில் நிறுத்தப்பட்ட நிர்மாண செயற்பாடுகளை பூர்த்தி செய்து கட்டிடம் 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் பயன்படுத்தும் நிலைக்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தயாரிப்பதற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுத்து பரிசோதனையை உள்ளடக்கிய அறிக்கை ஒன்று அதிகார சபைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த அறிக்கையின் பிரகாரம் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். | |
| (ஆ) | முழுநேர பாடநெறிக்காக அறவிடுவதற்கு பணிப்பாளர் சபையினால் அங்கீகாரம் வழங்கப்படாத 16 வாடநெறிகளில் இருந்து மீளாய்வாண்டின் போது ரூபா 19,003,930 பாடநெறிக் கட்டணம் அறவிடப்பட்டிருந்தது. | நிருவாகம் காரணமாக ஏற்பட்ட குறைபாடுகள் மற்றும் மாற்றங்கள் எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக அங்கீகரிக்கப்பட்ட பாடநெறிகளில் இருந்து மாத்திரம் பாடநெறிக் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.3 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிகார சபைக்குச் சொந்தமான வாகனங்களைப் பழுதுபார்த்தல் மற்றும் தொழிற்பயிற்சி பாடநெறிகளைப் பின்பற்றுகின்ற மாணவர்களுக்காக தொழிற் பயிற்சிகளை வழங்கும் நோக்குடன் அதிகார சபையினால் 2011 ஆம் ஆண்டு முதல் நடாத்திச் செல்லப்படுகின்ற வாகன பராமரிப்பு பிரிவு நிறுவனத்தின் செயலாற்றலுக்கு | அதன் நிருவாக நடவடிக்கைகள் மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகளை முறையான உள்ளகக் கட்டுப்பாடொன்றுடன் பேணிச் செல்வதற்காக பொருத்தமான உத்தியோகத்தர் மடுல்லகேயின் பங்குபற்றல் இல்லாதிருந்தமை யினால் தற்காலிகமாக பராமரிப்பு பிரிவு மூடப்பட்டுள்ளது. | நிருவாகப் பிரச்சினைகளை தீர்த்து சொத்துக்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கு நடிவக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆக்கபூர்வமாக பங்களிப்பு வழங்கியிருந்த போது பல்வேறு காரணங்களின் அடிப்படையில் 2018 திசெம்பர் 31 ஆம் திகதி முதல் முறையான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமல் மூடப்பட்டிருந்ததுடன் இந்தப் பிரிவுக்குச் சொந்தமாக இருந்த உபகரணங்கள் பயன்படுத்தாமல் மோட்டார் தொழில் நுட்ப பிரிவில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | 2010 ஆம் ஆண்டின் போது ரூபா 5,823,000 செலவில் கொள்வனவு செய்யப்பட்ட அம்பாந்தோட்டை மாவட்டத்தில் ஹேணகடுவ வெலேவத்தயில் அமைந்துள்ள 02 றூட் 33.5 பேர்ச் காணி மற்றும் 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 34,030,346 செலவில் நீண்ட கால வாடகை அடிப்படையில் பெறப்பட்டு பாணந்துறை மோதரவிலயில் அமைந்துள்ள 01 ஏக்கரையுடை காணி என்பன 2023 ஆம் ஆண்டு வரையிலும் தொழிற் பயிற்சிகளுக்காக ஆக்கபூர்வமாக பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது. | தொழிற் பயிற்சி நிலையத்தில் பயிலுநர்களுக்காக வெளிச் செயற்பாடுகள் மற்றும் நாளாந்த செயற்பாடுகளுக்காக வசதிகள் வழங்கப்பட்டுள்ளது. பாணந்துறை மோதரவிலயில் புதிய நிலையத்தை நிர்மாணிப்பதற்காக உரிய திட்டம் தயாரித்து துறைசார்ந்த நிபுணர் அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் 2020 ஆம் ஆண்டில் காணப்பட்ட தொற்று நோய் நிலைமையின் காரணமாக அது தாமதமடைந்தமையினால் ஒப்பந்தம் கையளிக்கப்பட வில்லை. | சொத்துக்களை சரியாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | நிர்மாணங்களை ஆரம்பிப்பதற்கு முன்னர் சாத்தியவள ஆய்வு அறிக்கையைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் 2017 ஆம் ஆண்டின் போது | நீர் வழங்கல் மற்றும் நீர் வடிகாலமைப்பு சபையின் மூலம் நிரந்தர நீர் வழங்கும் வரை பௌஸர் மூலம் நிலையங்களுக்கு தேவையான நீர் | நிலையான நீர் வழங்கலைப் பெற்று பயிலுநர்களின் விடுதிகளாக பயன்படுத்தவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| குச்சவெளி ஹோட்டல் பாடசாலையில் 52 பயிலுநர்களுக்கு தங்குமிட வசதிகளை வழங்கக்கூடிய முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்ட 12 அறைகளையுடைய இரண்டு மாடி விடுதிக் கட்டிடமொன்று ரூபா 140.21 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த ஆண்டில் இருந்து இதுவரையும் நிர்நதர நீர் வழங்களைப் பெற்றுக்கொள்வதற்கு முடியாமையின் காரணமாக பயிலுநர்களின் விடுதியாகப் பயன்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | வசதிகளை வழங்கும் இணக்கப்பாட்டின் அடிப்படையில் இந்த நிலையம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. | |

## 3.4 பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 ஆம் ஆண்டிற்காக சுகாதார சேவை பெறுகைகளின் போது குறித்துரைத் திகதியில் ஒப்பந்தத்தைக் கையளிப்பதற்கு நடவடிககை எடுக்காமல் கடந்த 02 வருடங்களில் ஒப்பந்தம் கையளிக்கப்பட்ட இரண்டாவது ஆகக் குறைந்த விலை சமர்ப்பித்த வழங்குநருக்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டதன் காரணமாக அதிகார சபைக்கு ரூபா 2,038,700 நட்டம் ஏற்பட்டிருந்தது. | உரிய கேள்வி ஆவணங்கள் யாவும் ஆய்வு செய்யப்பட்டு பூர்த்தி செய்வதற்கு புதிய திணைக்கள பெறுகைக் குழு தலைவருக்கு காலம் போதியளவில் காணப்படவில்லை. | பெறுகை பணிகளை முறையாக நிறைவேற்றுவற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 செயல் நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 12 பணிகள் மீளாய்வாண்டில் நிறைவேற்றுவதற்கு அதிகார சபைக்கு முடியாதிருந்ததுடன் 03 பணிகளின் நிறைவேற்றும் பௌதீக செயல்முன்னேற்றம் 03 சதவீதத்திற்கும் 38 சதவீதத்திற்கும் இடையிலாக இருந்தது. | புதிய e QMS அறிமுகப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டமையால் காணப்படுகின்ற முறைமைகளுக்காக நிதி ஒதுக்கப்படாமை, அரச செலவின வரையறை, கல்விசாரா பதவியணியினரின் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு முடியாதிருந்தமை மற்றும் 2023 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்பட்ட ஆலோசனையாளர் பதவியை சேர்ப்பதற்கு முடியாதிருந்தமை காரணமாக இருந்தது. | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பணிகளை ஆண்டில் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |